மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30 ஆம் நாள் திங்கள்கிழமை
நி.இ.ம.எண்.01/2022
நி.ம.எண்.09/2021
அ.வ.எண்.08/2011

1. பழனிசாமி
2. விஜயகுமார்

. . . மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/1, 3 பிரதிவாதிகள்

/எதிராக/

1. தர்மலிங்கம்
2. உமாசரவணன் . . . .எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு கடந்த 05.10.2023 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.B.பாலமுருகன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.மோகன்ராம் அவர்கள் ஆஜராகியும் இது நாள்வரை எமது ஆய்வில் இருந்து வந்த மேற்படி மனுவினை பரிசீலனையில் எடுத்துக் கொண்டு இருதரப்பு வாதங்களை கருத்தில் கொண்டு இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 26 மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவாகும்.

## 1. மனுவின் சுருக்கம்

(i) மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகளும், நிறைவேற்று மனுவில் எதிர்மனுதாரர்களும் ஆவர். அ.வ.எண்.08/2011 என்ற வழக்கில் விசாரணை நீதிமன்றத்தால் மனுதாரர்களுக்கு எதிராக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது. மேற்படி தீர்ப்பாணைக்கு எதிராக மனுதாரர்களால் முதல் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி கீழமை நீதிமன்றங்களின் தீர்ப்புகளுக்கு எதிராக மனுதாரர்களால் 2ம் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதற்கிடையில் வாதிகள்/தீர்ப்பாணை பெற்றவர்களால் நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டு

உள்ளதால் 2ம் மேல்முறையீடு முடியும் வரை வாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட நிறைவேற்று மனுவின் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க கோரி மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 2ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்.</u>

(i) மனுவில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் தவறானதும், அற்பமானதும், சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. கீழமை நீதிமன்றங்களின் தீர்ப்புகள் குறைபாடுடையவை என மனுதாரர்கள் கூறுவது தவறானது. அ.வ.எண்.08/2011 என்ற வழக்கில் கடந்த 10.10.2014ம் தேதியில் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையிலும், மே.மு.வ.எண்.50/2014ல் கடந்த 28.07.2018ம் தேதியில் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு உள்ள நிலையிலும், மேல்முறையீட்டு தீர்ப்பாணைக்கு எதிராக கடந்த 3 ஆண்டுகளாக மனுதாரர்களால் எவ்வித மேல்முறையீடும் செய்யப்படவில்லை. இந்நிலையில் சுவாதீனத்தை ஒப்படைக்க கோரி எதிர்மனுதாரர்களால் கடந்த 22.07.2021ம் தேதியில் நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) மனுதாரர்களால் இந்நிறைவேற்று மனுவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையிலும் கூட மனுதாரர்கள் கீழமை நீதிமன்ற தீர்ப்புகளுக்கு எதிராக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் இரண்டாம் மேல்முறையீடு செய்துள்ளதாக எவ்வித குறிப்புகளும் இல்லை. மேலும் மனுதாரர்கள் தற்போது இரண்டாம் மேல்முறையீடு நிலுவையில் உள்ளதாக கூறும் நிலையில், அதன் வழக்கு எண்ணை குறிப்பிடவில்லை. இதிலிருந்தே நிறைவேற்று மனுவை காலதாமதப்படுத்த மனுதாரர்கள் இந்த தடை கோரும் மனுவை தாக்கல் செய்துள்ளது தெளிவாக தெரிவதால் செலவுத்தொகையுடன் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

<u>3. பிரச்சினை</u>

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே பிரச்சினையாகும்.

<u>4. பிரச்சினைக்கான தீர்வு</u>

(i) மனுதாரர்கள் தரப்பில் அ.வ.எண்.08/2011 என்ற வழக்கில் விசாரணை நீதிமன்றத்தால் மனுதாரர்களுக்கு எதிராக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றும், மேற்படி தீர்ப்பாணைக்கு எதிராக மனுதாரர்களால் முதல் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், மேற்படி கீழமை நீதிமன்றங்களின் தீர்ப்புகளுக்கு எதிராக மனுதாரர்களால் 2ம் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இதற்கிடையில் வாதிகள்/தீர்ப்பாணை பெற்றவர்களால் நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டு உள்ளதால் 2ம் மேல்முறையீடு முடியும் வரை வாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட நிறைவேற்று மனுவின் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க கோரி மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

(ii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேல்முறையீட்டு தீர்ப்பாணைக்கு எதிராக கடந்த 3 ஆண்டுகளாக மனுதாரர்களால் எவ்வித இரண்டாம் மேல்முறையீடும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், இந்நிலையில் சுவாதீனத்தை ஒப்படைக்க கோரி எதிர்மனுதாரர்களால் நிறைவேற்று மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்களால் இந்நிறைவேற்று மனுவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையிலும் கூட மனுதாரர்கள் கீழமை நீதிமன்ற தீர்ப்புகளுக்கு எதிராக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் இரண்டாம் மேல்முறையீடு செய்துள்ளதாக எவ்வித குறிப்புகளும் இல்லை என்றும், மேலும் மனுதாரர்கள் தற்போது இரண்டாம் மேல்முறையீடு நிலுவையில் உள்ளதாக கூறும் நிலையில், அதன் வழக்கு எண்ணை குறிப்பிடவில்லை என்றும், நிறைவேற்று மனுவை காலதாமதப்படுத்த மனுதாரர்கள் இந்த தடை கோரும் மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், எனவே செலவுத் தொகையுடன் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் எதிர்வாதம் செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில், மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகளால் விசாரணை மற்றும் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றங்களின் தீர்ப்பாணைகளுக்கு எதிராக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் இரண்டாம்

மேல்முறையீடு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளதால், மேற்படி இரண்டாம் மேல்முறையீடு முடியும் வரை எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பாணை பெற்றவர்கள் தாக்கல் செய்துள்ள நி.ம.எண்.09/2021 என்ற மனுவின் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம், 1908, கட்டளை 21 விதி 26 மற்றும் பிரிவு 151 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(iv) கற்றறிந்த இருதரப்பு வழக்கறிஞர்களின் மதிப்புமிக்க வாதங்கள் கவனமாக கருத்தில் கொள்ளப்பட்டன. முதலாவதாக, மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் இரண்டாம் மேல்முறையீடு நிலுவையில் உள்ளதாக கூறும் மனுதாரர்கள் இரண்டாம் மேல்முறையீட்டு எண் குறித்து பிரமாண வாக்குமூலத்தில் எதுவும் குறிப்பிடவில்லை என்பது தெரியவருகிறது. மேலும் இரண்டாம் மேல்முறையீட்டை தாக்கல் செய்வதில் உள்ள காலதாமதத்தை மன்னிக்க கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்துள்ள மனு கோப்பிற்கு எடுக்கப்பட்டு SR.No.106493/2021 மட்டுமே வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(v) இந்த தடை கோரும் மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவண நகலை பரிசீலனை செய்கையில், மேற்படி மனுவும் கடந்த 25.11.2021 ம் தேதியில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. தற்போது மனுதாரர்களால் நிறைவேற்று மனுவின் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு கடந்த 11.11.2022 ம் தேதியில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. அவ்வாறு உள்ள நிலையில், மனுதாரர்களால் தடை கோரும் இம்மனு தாக்கல் செய்யப்படும் வரை மேற்படி 25.11.2021 ம் தேதியில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட காலதாமதத்தை மன்னிக்க கோரும் SR.No.106493/2021 என்ற மனு என்ன ஆனது என்பது குறித்து மனுதாரர்களால் எவ்வித விளக்கமும் அளிக்கப்படவில்லை என்பது தெரியவருகிறது.

(vi) மேலும் கீழமை நீதிமன்றங்களின் உத்தரவிற்கு எதிராக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால் இடைக்கால தடை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக எவ்வித

உத்தரவுகளும் மனுதாரர்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. தீர்ப்பாணை பெற்றவர்களால் நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், முதல் மேல்முறையீடு அல்லது இரண்டாம் மேல்முறையீடு நீதிமன்றங்களால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தாலே அன்றி மேற்படி நிறைவேற்று மனுவின் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க இயலாது என்பது நன்கு நிறுவப்பட்ட சட்ட நிலைப்பாடாகும். எனவே இரண்டாம் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளதால் இந்நிறைவேற்று மனுவின் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க கோரும் மனுதாரர்களது கோரிக்கை ஏற்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(vii) அதேபோல் மனுதாரர்களால் உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம், 1908, கட்டளை 21 விதி 26 மற்றும் பிரிவு 151ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதை கருத்தில் கொள்கையில், மேற்படி சட்டப்பிரிவின் கீழ் ஒரு தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட நீதிமன்றத்திலிருந்து மேற்படி தீர்ப்பாணை நிறைவேற்றுதலுக்காக மாற்றி அளிக்கப் பெற்ற நீதிமன்றத்தில் தான் (Transferee Court) உ.வி.மு.ச. 1908, கட்டளை 21 விதி 26ன் கீழ், மேற்படி தீர்ப்பாணையை பிறப்பித்த நீதிமன்றத்திலோ, அல்லது அதன் மேல்முறையீட்டு நீதிமன்றத்திலோ விண்ணப்பிக்கும் பொருட்டு கால அவகாசம் வழங்க கோரி இம்மனுவை தாக்கல் செய்ய இயலும் என்பது தெரியவருகிறது.

(viii) அவ்வாறு உள்ள நிலையில், தற்போது இந்நீதிமன்றம் இந்நிறைவேற்று மனுவில் கண்டுள்ள தீர்ப்பாணையை பிறப்பித்த விசாரணை நீதிமன்றம் என்பதால், இந்நீதிமன்றத்தில் உ.வி.மு.ச. 1908, கட்டளை 21 விதி 26ன் கீழ், நிறைவேற்று மனுவின் நடவடிக்கைளை நிறுத்தி வைக்க கோரி இம்மனுவை தாக்கல் செய்ய இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மேற்கண்ட விவாதங்களின் அடிப்படையில் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிறைவேற்று மனுவின் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க கோரும் இம்மனு தகுதிப்பாடற்றது என கருதி, இம்மனுவை இந்நீதிமன்றம் தள்ளுபடி செய்கிறது.

முடிவாக செலவுத்தொகையின்றி இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/-திரு.ஆர்.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:- இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:- இல்லை</u>

ஒப்பம்/-திரு.ஆர்.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.